செய்தி வெளியீடு எண். 12-2017 நாள்: 06.06.2017

# விழுப்புரம் மாவட்டம் பிற்படுத்தபட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியர் விடுதிகளில் தங்கி கல்வி பயில தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

தமிழ்நாடு அரசால் விழுப்புரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கென 38 விடுதிகளும், மாணவிகளுக்கென 14 விடுதிகளும், கல்லூரி மாணவர்களுக்கென 6 விடுதிகளும், மாணவிகளுக்கென 2 விடுதிகளும் உள்ளன.

பள்ளி விடுதிகளில் 4 முதல் 12ம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர்/ மாணவியர்களுக்கும், கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. படிப்புகளில் பயிலும் மாணவ/ மாணவியர் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். பிவமி/பிவ/சீம விடுதிகளில் அனைத்து வகுப்பை சார்ந்த மாணவ/ மாணவியர்களும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

விடுதிகளில், அனைத்து விடுதி மாணவ/ மாணவியருக்கும் உணவும் தங்கும் வசதியும் அளிக்கப்படும். 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 2 செட் பாலியெஸ்டர் காட்டன் சீருடைகள் வழங்கப்படும். 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படும். மலைப்பிரதேசங்களில் இயங்கும் விடுதிகளில் கம்பளி மேலாடைகள் வழங்கப்படும்.

விடுதிகளில் சேருவதற்கு, பெற்றோர்/ பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீ.-க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது. அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 50 எனில் குறைந்தபட்சம் 2 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும், அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 100 எனில் 3 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் சேர்க்கைக்கான இடஒதுக்கீடு வழங்கப்படும்.

தகுதியுடைய மாணவ/ மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர்/ காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 30.06.2017-க்குள்ளும் கல்லூரி விடுதிகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/ காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 31.07.2017-க்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ மாணவியர்கள் விண்ணப்பிக்கும் பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத் தேவையில்லை. விடுதியில் சேரும்போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, மாணவ, மாணவியர்கள் அரசின் இச்சலுகைகளை பெற்று பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.